Publication: Tamil Murasu (Special), pg 01
Date: 26 July 2021
Headline: Olympics in the flood of lights

# ஒளி வெள்ளத்தில் ஒலிம்பிக்



வெள்ளிக்கிழமையன்று கண்கவர் ஒளி வெள்ளத்துடன் தொடங்கியது 'தோக்கியோ ஒலிம்பிக் 2020'.



நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக் சென்ற ஆண்டு 2020 தோக்கியோவில் நடைபெற இருந்தது. ஆனால் கொவிட்–19 பரவல் காரணமாக ஓராண்டுக் காலம் போட்டி ஒத்தி வைக்கப்பட்டது. இந்த ஆண்டும் ஒலிம்பிக் போட்டி நடைபெறுமா அல்லது மீண்டும் ஒத்தி வைக்கப்படுமா என்ற சந்தேகம் பலருக்கும் இருந்தது.

இறுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாகச் செய்யப்பட்டு, இம்மாதம் 23ஆம் தேதி வெள்ளிக் கிழமையன்று ஒலிம்பிக் 2020 கோலாகலமாக ஒரு சில பார்வையாளர் களுடன் தொடங்கியது. இந்த போட்டி ஆகஸ்ட் 8ஆம் தேதி வரை நடைபெறும்.

தோக்கியோவில் நடைபெறும் இந்த போட்டியில் கலந்து கொள்ள சிங்கப்பூரில் இருந்து 23 பேர் ஜப்பான் சென்றிருக்கின்றனர். அவர்களில் ஓட்டப்பந்தய வீராங்கனை வெரோனிக்கா சாந்தி பெரேராவும் ஒருவர். இவர் ஒலிம்பிக்கில் முதல்முறையாக பங்கேற்கிறார்.

பெண்களுக்கான 100 மீட்டரை 11.58 விநாடியிலும் 200 மீட்டரை 23.60 விநாடியிலும் ஓடி தேசிய சாதனைகள் புரிந்திருக்கிறார். இந்த இரண்டிலும் இவருடைய சாதனையை இதுவரை எவரும் முறியடிக்கவில்லை.

இவர் 2015ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் நடைபெற்ற தென்கிழக்காசிய விளையாட்டுகளில் 200 மீட்டர் பெண்கள் ஓட்டப் பிரிவில் தங்கம் வென்றார்.

ஒலிம்பிக் விளையாட்டுகளுக்குத் தகுதி பெறத் தவறியவர்கள் தேசிய சாதனை செய்திருந்தால் அவர்களுக்கு ஒலிம்பிக்கில் இடம் ஒதுக்குவதுண்டு. அதன் அடிப்படையில் இவர் 200 மீட்டர் பெண்கள் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ள ஜப்பான் சென்றிருக்கிறார்.

படங்கள்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ், ஊடகம்

மேலும் செய்திகள் பக்கம் 6–7

## இதழ் 18

பொருளடக்கம்

2. ஒருமை - பன்மை
3. 'ப' வரிசை சொல்
4. சொல் இணைத்தல்
5. தமிழ் மாதங்கள்
6. ஒலிம்பிக் 2020
7. ஏழு தங்கம் எதிர்பார்ப்பு
8. வருந்திய மாறன்
9. சொல் அறிவோம்
10. உங்களுக்குத் தெரியுமா?
11. திருக்குறள் விளக்கம்
12. ஒலிம்பிக் சுடர்